# பக்திப்பாடல் மரபில் 'ஞானப்பால்': சுருக்க அறிமுகம்

சி. தில்லைநாதன்

தமிழ்மொழியிலே, பல்லவர் காலத்தில் எழுந்த சைவ – வைணவப் பக்திப் பாடல்களுக்கு இணையான முஸ்லிம் பக்திப்பாடல்கள் பலவுண்டு. இவை அனேகமாகப் படிப்பாரும் அனுபவிப்பாரும் குறைந்து கிடந்தபோதிலும் அவற்றின் சிறப்பும் உருக்கமான தன்மையும் என்றும் குறைவுபடாதென்பது திண்ணம். முஸ்லிம்கள் தமிழிலே செய்துள்ள இலக்கிய நூல்களைச் சுட்டிக்காட்டி அவற்றை முஸ்லிம்கள் தமிழிற்குச் செய்த தொண்டென்று நாம் சொல்வதுபோல முஸ்லிம் மதத்தின் தன்மையையும் சிறப்பையும் விளக்கும் இப்பக்திப் பிரவாகங்களைக் காட்டித் தமிழ் முஸ்லிம் மத விளக்கத்துக்கும் பெருமைக்கும் செய்தசேவை என்று சொல்வது தவறாகாது. ஏனெனில் தமிழில் அவை அமைந்துள்ள உருக்கமான தன்மை குன்றாது அவற்றைப் பிறமொழிகளில் பெயர்க்க முடியாது. ஆனால் தமிழையும் முஸ்லிம்களையும் நாம் வேறுபடுத்துவதென்பதும் இயலாத காரியம். அவர்களிலும் ஒரு பகுதியார் தமிழையே தாய்மொழியாகக் கொண்டவர்கள். மொழிமூலம் அனுபவத்தை வெளியிடும்போதுதான் இலக்கியம் பிறக்கும். அதையும் தாய்மொழி மூலமே நயமாகச் செய்யலாம். முஸ்லிம்கள் தமது அனுபவங்களை இலக்கியங்களாகத் தமிழிலே படைத்துள்ளனர். அவ்விலக்கியங்கள் தமிழ்த் தாய்க்கு அழகூட்டி அணிசெய்கின்றன. முஸ்லிம்கள் தமது சமய அனுபவத்தை அழகாகத் தமிழில் மொழிந்துள்ளனர். அவை முஸ்லிம் மதத்தின் தன்மையையும் சிறப்பையும் நன்கு விளக்கி முஸ்லிம்களல்லாதார் மனதையும் கவர்கின்றன.

அவ்வாறு முஸ்லிம்கள் இயற்றியுள்ள பக்திப்பாடல்கள் பல. அவற்றுள் ஒன்று ஞானப்பால். அதை அல்லாஹ்வின் பேரில் (பிஸ்மில்லாஹி), ஹஸரத் பீர் முஹம்மது சாஹிபு ஒலியுல்லா இயற்றியுள்ளார். முப்பத்துமூன்று பாடல்களையும் ஒரு காப்புச் செய்யுளையுமுடைய இந்நூல் பெயருக்கேற்ப ஞானப்பாலாகவே உள்ளது. அல்லாஹ்வின் தன்மையையும் அவனது அருளைப் பெறும் வழியையும் இந்நூல் நயம்படக் கூறுகின்றது.

இறைவன் ஏகனே என்பதும் அவனுக்குத் துணையோ இணையோ இல்லை என்பதும் முஸ்லிம் மதக்கொள்கை. இதனை முஸ்லிம் மதம் மிக வற்புறுத்துகின்றது. இறைவன் ஏகனே என்பதற்குச் சிறிதும் முரணில்லாது எல்லா முஸ்லிம்களும் நடந்துகொள்ள வேண்டுமென்பது முஸ்லிம் மதக் கோட்பாடுகளில் ஒன்று. எந்தவிதமான படிமப் பூசைகளையும் முஸ்லிம்கள் செய்வதில்லை. திரு மக்காவிலுள்ள முஸ்லிம்களின் ஆதி ஆலயமாகிய க.்பாவும் ஒரு நீள்சதுரக் கருங்கற் கட்டிடம் மட்டுமேதான். அதனுள் ஏதும் படிமமோ, படமோ அல்லது வேறேதாவது வடிவங்களோ இல்லை. அல்லாஹ்விற்கு எதுவிதமான உருவத்தையும் முஸ்லிம் மதம் கூறவில்லை. அதனால்தான் அல்லாஹ்வை மகாகவி பாரதியாரும் "சொல்லாலும் மனத்தாலும் தொடரொணாத பெருஞ் சோதி" என்றார்.

அல்லாஹ்வின் தன்மை 'ஞானப்பாலி'ல் மிக நயம்படக் கூறப்பட்டிருப்பது படிக்குந்தோறும் இன்பந்தரவல்லது.

> "பாலது வெள்ளை யெங்கும் பரந்தநம் மிரசூல் பாதம்
> நாலது மவுத்துக் கப்பால் நடுவில்நின் றிலங்குஞ் சோதி."

> "வட்டமோ வொளியோ தேனோ மறையதி லுதித்த வானோ
> இட்டமோ ஈமான் றானோ விரவுமேல் வெளியுள் ளானோ
> திட்டமோ ஆதம் தானோ திருக்குரு தந்தை தானோ
> ஒட்டனோ வோடில் லானோ வுரைக்கயா னறிந்தி லேனே."

என்றெல்லாம் ஹஸரத் பீர் முஹம்மது சாஹிபு ஒலியுல்லா அல்லாஹ்வைப் பாடுகின்றார். உருவங்காணமுடியாத அல்லாஹ்வின் எங்கும் நிறைந்த தன்மையை அவர் வியந்து வியந்து பாடுகிறார். சாதாரண மக்கள் வழிபட உருவங்களையும் படங்களையும் காட்டியுள்ள சைவ வைணவ மதங்களும் இறைவனுக்கு வடிவமில்லையென்றும் அவர் எங்கும் நிறைந்திருக்கிறார் என்றுமே கூறுகின்றன.

> "எக்கோலத் தெவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
> அக்கோலத் தவ்வுருவேயாம்" என்ற காரைக்காலம்மையார் பாடலாலும்,

நிறமுயர் கோலமும் பேரு முருவுமிவை யிவையென்று
அறமுயல் ஞானச் சமயிகள் பேசிலும், அங்கங்கெல்லாம்
உறவுயர் ஞானச் சுடர்விளக்காய் நின்றதன்றி யொன்றும்
பெறமுயன் றாரில்லையால், எம்பிரான் பெருமையையே"

என்ற நம்மாழ்வார் பாடலாலும் இதனை அறியலாம். அல்லாஹ்வைப் பற்றி 'ஞானப்பாலி'ல் சாஹிபு ஒலியுல்லா கூறுவதற்கும் சிவனைப் பற்றிக் காரைக்காலம்மையார் கூறுவதற்கும் விஷ்ணுவைப்பற்றி நம்மாழ்வார் கூறுவதற்கும் வித்தியாசமில்லை. எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளை எப்படிக் கூறினாலென்ன? மகாகவி பாரதியாரும்,

"எல்லை பிரி வற்றாதுவாய் யாதெனுமோர் பற்றிலதாய்
இல்லையுள தென்றறிஞர் என்றுமய லெய்துவதாய்" உள்ளதென்றே பாடுகின்றார்.

அல்லாஹ்வின் அருள் கிடைத்தால் அதனால் உண்டாகும் பயனை 'ஞானப்பால்' அழகாக விளக்குகிறது. இஸ்லாம் மதமே "முதல்வனை எண்ணி முற்றும் தெளிந்த இதய சாந்தமே" என்றார் கவி சுத்தானந்த பாரதியார். இந்த இதய சாந்தம் கிடைத்துவிட்டால் வாழ்வில் என்ன குறையிருக்க முடியும்? பொதுமறை தந்த திருவள்ளுவர் கூறுகின்றார்:

"வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல." என்று இந்தக் கருத்துப்படவே 'ஞானப்பா'லும் பகர்கிறது; கலிமா (Article of faith) கிடைத்துவிட்டால் உடம்புக்குக் குறைவேதும் இல்லையென்று.

"கலிமா கிடைக்கிற்காட் சிக்கென் குறையா
சலியாத வன்றேகந் தங்கம் – அலிபாலே
காண்பார் பொருளைக் கதிர்மதியின் மையவட்டத்
தேன்பாலை யுண்பார் தினம்."

ஏழைகட்கு உதவி செய்ய வேண்டுமென்பதிலும் முஸ்லிம் மதம் மிகவும் கவனம் செலுத்துகின்றது. குறிப்பிட்ட ஒரு அளவிற்குமேல் வருமானமுள்ள ஆண்களும் பெண்களும் தமது வருமானத்தில் ஒரு பகுதியை ஏழைகட்களிக்க வேண்டுமென்பதும் முஸ்லிம் மதக் கோட்பாடுகளில் ஒன்று. இதை வற்புறுத்தவே 'ஞானப்பாலி'ல்,

"ஓங்குங் கொடிமரத்தி னுச்சி கலிமாவால்
வாங்கிக் கொடிகட்டி வைத்திடுங்கள் – தூங்கியெழு
ஞானக் கொடிபரக்கும் நன்மைமிகுந் திட்டகொடி
தானத்தி லுற்றவர்க்குத் தான்" என்று கூறப்பட்டிருக்கிறது.

இந்த உலகத்திலே நாம் அடையும் துன்பங்களுக்கெல்லாம் காரணம் நாமெடுத்துள்ள இந்தப் பிறவியே என்கின்றனர் பல சமயஞானிகள். "பிறந்தோருறுவது பெருகிய துன்பம் பிறவாருறுவது பெரும்பேரின்பம்" என்கின்றது 'மணிமேகலை', இப்பிறவித் துன்பத்தினின்றும் விடுதலைபெற்றுத் தண்ணொளி காண்பதற்கு 'ஞானப்பால்' வழிகாட்டுகின்றது.

"தினமுமே யொன்றாய் நின்ற திருவொளி காண வேதான்
மனமதும் வாக்கு மொன்றாய் மறைபொருள் வெளிய தாகித்
தனமது அறுஷின் மேலே தண்ணொளி கண்ட பேர்க்குச்
செனனமு மரணம் நீங்கித் திருப்பதஞ் சேர லாமே"
என்று 'ஞானப்பால்' கூறுவதும்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்" என்று வள்ளுவர் கூறுவதும், பிறவித் துன்பம் நீங்குவதற்கு ஒரேவழியைத்தான் காட்டுகின்றன.

இத் தண்ணொளி காண்பதற்கும் 'ஞானப்பால்' நெறி பகர்கிறது.

"விண்ணொளி காணவேண்டின் மெய்யிறை யருளி னாலே
கண்ணொளி யுருகச் சேர்த்துக் கருத்தொளி நடுவில் நோக்கிப்
பொன்னொளி மேஷம் வாலைப் பொருள்ரச மருந்தி மேலாந்
தன்னொளி கண்டுஞானத் தானவ னாக லாமே." இந்த விண்ணொளி காண்பதற்கு,

"இமையாத கண்ணா லிருளகல நோக்கி,
அமையாப் பொறிபுலன்க ளைந்தும் நமையாமல்"

இருக்கும்படியே பொய்கையாழ்வாரும் கூறுகிறார். பொய்கையாழ்வாரும் முஹம்மது சாஹிபு ஒலியுல்லாவும் விண்ணொளி காண்பதற்குக் காட்டும் மார்க்கம் ஒன்றே. அவர்கள் அடையும் இடத்துக்கு வேறுவேறு பெயர்கள் கூறினாலும் காட்டும்பாதை ஒன்றாகவே இருக்கிறது.

விண்ணொளி கண்டு ஞானம் பெற்றவர்களுக்கு இறப்பும் பிறப்பும் பிறதுன்பங்களும் இல்லையென்பதைக் கூறவந்த சாஹிபு ஒலியுல்லா,

"பிறப்புட னிறப்பு மில்லை பிசகது தானு மில்லை
நிறப்புக முனைத்து மொன்றாய் நின்றது நிறைந்த சோதி
சிறப்புள வமுத மூட்டித் திருப்பதஞ் சேர்க்கும் ஞானத்
திறப்புக ளறிந்த பேர்க்குத் திறவுகோல் குருவ தாமே."

என்கிறார். முப்பத்துமூன்றே பாடல்களுள்ள 'ஞானப்பால்' நமது இதயம் கவரும் தன்மைத்து, எளியநடையில் அமைந்துள்ள அதன் பக்தி உணர்ச்சி எத்தனை தடவை படித்தாலும் தெவிட்டாது.